NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 9 August 2022

குவீன்ஸ்டவுன் குடியிருப்பாளர்களுக்கு சுகாதாரச் சேவையை மேம்படுத்த இலக்கு

# முன்னோடித் திட்டத்துக்கு $5 மில்லியன் நன்கொடை

குவீன்ஸ்டவுன் பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தங்கள் மன, உடல்நலனை நன்கு பார்த்துக் கொள்ள உதவும் முன்னோடித் திட்டம் ஒன்றுக்கு $5 மில்லியன் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு, சுகாதாரம் தொடர்பான தலைப்பையொட்டி நடத்தப்படும் பேச்சு போன்ற நிகழ்வுகளுக்கு நிதியளிக்கும் ஆய்வுத் திட்டங்கள், முயற்சிகளுக்கு இந்த நன்கொடை வலுசேர்க்கும் என்றார் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (என்யுஎஸ்) சுகாதாரப் புத்தாக்கம், மொழிபெயர்ப்புக்கான மூத்த துணைத் தலைவரான பேராசிரியர் ஜான் இயூ லி வோங்.

ஹெல்த் டிஸ்ட்ரிக்ட்@குவீன்ஸ்டவுன் என்று அழைக்கப்படும் இந்த முன்னோடித் திட்டத்துக்கு என்யுஎஸ், தேசிய பல்கலைக்கழக சுகாதார முறை, வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) ஆகியவை தலைமை தாங்குகின்றன.

நோய்த் தடுப்பு சுகாதாரச் சேவை போன்ற பரிசோதனை முறையை இந்தத் திட்டம் உள்ளடக்கும். குடியிருப்பாளர்களை வெளியிடங்களுக்குச் செல்ல ஊக்குவிக்கும் கூடுதலான நகர வேளாண் பகுதிகளும் இதில் அடங்கும்.

விஜாஜா குடும்பம் நேற்று இந்த நன்கொடையை வழங்கியது. இந்தோனீசியாவை பூர்வீகமாகக் கொண்டுள்ள இக்குடும்பம், பெரும் செல்வந்தரான காலஞ்சென்ற எகா ஜிப்தா விஜாஜாவுடன் தொடர்புடையது. 'பண்ட் சென்டர் இன்வெஸ்ட்மண்ட்' நிறுவனத்தின் நிர்வாகத் தலைவரும் தலைமை நிர்வாகியுமான திரு ஃபிராங்கள் விஜாஜா, $5 மில்லியனுக்கான காசோலையை என்யுஎஸ் தலைவர் டான் எங் சாய், பேராசிரியர் வோங்கிடம் வழங்கினார்.

ஃபோர் சீசன்ஸ் ஹோட்டலில் நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பு செய்தியாளர்களிடம் பேசிய திரு விஜாஜா, அர்த்தமுள்ள திட்டங்களுக்கு ஆதரவளிப்பது முக்கியம் என தம்முடைய குடும்பத்தார் நம்புவதாகச் சொன்னார்.

மூத்தோர் அதிகமானோர் வசிக்கும் குடியிருப்புப் பேட்டைகளில் ஒன்றாக குவீன்ஸ்டவுன் விளங்குகிறது. கிட்டத்தட்ட நான்கில் ஒருவர் 65 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுடையவர்களாக இருக்கின்றனர் என்று வீவக, என்யுஎஸ் தேசிய பல்கலைக்கழக சுகாதார முறை ஆகியவை வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.